வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 526/2020

வழக்கு சாட்சி LW2/PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இந்திரா | ஜாதி | |
| கணவர்/தந்தை | ராஜேந்திரன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 40 |

தேதி 23.10.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர் இல்லை. மனுதாரர் தரப்பு 355 BNSS பிரிவின் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மாதவரத்தில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் எனது அம்மா. அவர் தற்போது உயிருடன் இல்லை. கடந்த 2019 ஆம் ஆண்டு தேதி மாதம் ஞாபகம் இல்லை. மூலச்சத்திரம் நர்சரியில் எங்கள் அம்மா பணிபுரிந்துக்கொண்டு இருந்த போது அங்கு செடி காணாமல் போனதால் பால்பண்ணை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். திருடி வைத்திருந்த செடியை காரிலையே வைத்துவிட்டுச் சென்றதால் அது குறித்து எனது அம்மா புகார் அளித்தார். எனது அம்மா எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள். யார் திருடியது என்று எனக்குத் தெரியாது.

**குறுக்கு விசாரணை**

எனது அம்மா கூறி தான் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். எனது அம்மாவிற்கு எழுதப் படிக்க தெரியாது என்றால் ஆமாம். மறுநாள் தான் எனது அம்மா புகார் அளித்தார் என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை.**